EVERWIN MATRIC. HR. SEC. SCHOOL

19.02.2020 FN REVISION-IV Marks: 90

STD: XII (F-J) தமிழ் Time: 3 hrs

பகுதி-I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. 'குவலயானந்தம்' என்னும் நூல் ________ இலக்கணத்தை மட்டுமே கூறும்.
   அ) எழுத்திலக்கணம் ஆ) சொல் இ) யாப்பு ஈ) அணி
2. 'ஆணும் பெண்ணும் ஒருயிரின் 2 தலைகள் என்றெழுது' என தம்பிக்கு எழுதிய கவிஞர்.
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) மேத்தா ஈ) அப்துல்ரகுமான்
3. அய்யப்ப மாதவன் ________ கோட்டையைச் சேர்ந்தவர்.
   அ) வஞ்சிக் ஆ) நாட்டரசன் இ) நாலுவாசல் ஈ) தேவ
4. ஆங்கிலத்தில் இருந்த நீதி மன்றத் தீர்ப்புகளை முதன் முதலில் தமிழில் வெளியிட்டவர் ________.
   அ) நீதிபதி கிருஷ்ணய்யர் ஆ) நீதிபதி சோமநாதன்
   இ) மாயூரம் வேதநாயகம் ஈ) நீதிபதி இஸ்மாயில்
5. திருமணம் தொடங்கி முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டத்தைக் குறிப்பது ________.
   அ) மணந்தகம் ஆ) பிறந்தகம் இ) புகுந்தகம் ஈ) வளர்ந்தகம்
6. நான்கு முதல் பன்னிரண்டு வரை அடிவரையறை உடைய பாவகை ________ ஆகும்.
   அ) குறள் வெண்பா ஆ) பஃறொடை வெண்பா
   இ) கலிவெண்பா ஈ) சிந்தியல் வெண்பா
7. புறம் என்றும் புறப்பாட்டு என்றும் அழைக்கப்படும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றானது ________.
   அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) தேவாரம் ஈ) கலித்தொகை
8. வெகுளி என்பதன் பொருள் ________.
   அ) கோபம் ஆ) வியப்பு இ) மகிழ்ச்சி ஈ) பெருமை
9. 'திண்ணியர் ' என்பதன் பொருள் தருக.
   அ) அறிவினார் ஆ) மன உறுதியுடையவர் இ) அறிவிலார்
   ஈ) தீக்காய்வார்
10. வேளாண் மேலாண்மை என்பது ________.
    கூற்று 1: சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல்
    கூற்று 2: நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்.
    அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1 தவறு, 2 சரி
    இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1, 2 தவறு
11. 'கிறிஸ்துவமும் தமிழும்' என்னும் நூலை எழுதியவர் ________.
    அ) மீனாட்சி ஆ) மயிலையார் இ) பாரதியார் ஈ) திரு.வி.க
12. தெய்வமணிமாலை திருவருட்பாவில் ________ திருமுறையில் இடம் பெற்றுள்ளது.
    அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) நான்காம் ஈ) ஐந்தாம்
13. பெருந்தோள் மடந்தை என்பவள் ________.
    அ) மாதவி ஆ) மாதிரி இ) கண்ணகி ஈ) மணிமேகலை
14. நடிகர் திலகத்துக்கு சிவாஜி எனப் பெயர் சூட்டியவர் ________.
    அ) அண்ணா ஆ) வீரமணி இ) பெரியார் ஈ) எம்.ஜி.ஆர்

பகுதி-II

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக:

பிரிவு-1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 12× 2 =24

15. பிறகொரு நாள் கோடை என்னும் தலைப்பில் எழுதிய ஆசிரியர் யார்? அவரைப் பற்றிய குறிப்பு தருக.
16. வேடுவதலைவன் குகனிடம் இராமன் கூறியது என்ன?
17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?
18. இசைக்கருவிகள் ஒலித்த முறை யாது?

பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19. தமிழர் தம் பழம்பெருமையை உணர உதவும் புதையலாக விளங்கியது எது?
20. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
21. எழுத்தாணி எத்தனை வகைப்படும் அவை யாவை?

பிரிவு-3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக.

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) வருவான் ஆ) எழுகின்றாள்
23. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இலக்கணக்குறிப்புத் தருக.
    அ) யாரையும் ஆ) காய்நெல்
24. மரபுப்பிழை நீக்குக.
    வண்டுகளின் ஒலிகேட்டு புலிக்குட்டிகள் களிப்புற்றன.
25. சொல்லைச் சேர்த்தும், பிரித்தும் தொடரமைக்க.
    கண்டதைக் கற்க
26. கொச்சைச் சொற்களைத் திருத்துக.
    எத்தினி நபா சொன்னாலும் படிப்புல கவனத்தைக் காணோம்.
27. விடைக்கேற்ற வினா தருக.
    அ) கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் கல்வியே!
    ஆ) சைவ சமயத்தின் தலைமைக் கடவுள் சிவபெருமான்.
28. மயங்கொலிச் சொற்களின் பொருள் அறிந்து ஒரே தொடரில் அமைக்கவும்.
    கலை - களை

29. வல்லின மெய்களைத் தேவையற்ற இடங்களில் நீக்கி எழுதுக.
தான் பார்த்தப் பெண்ணைப் பிடிக்கவில்லை என்று சொன்னத் தந்தையிடம் கோபப்பட்டான் மகன்.

30. வடமொழி நீக்கித் தனித்தமிழில் எழுதுக.
சுபமுகூர்த்தம் கூடிய நாளில் திருக்கோவிலில் கும்பாபிஷேக வைபவம் நடந்தது.

## பகுதி-III

ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.

### பிரிவு-1 $7\times 4 = 28$

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.

31. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.
32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
33. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.

35. ஒரு நாட்டினுடைய வரலாற்றின் முக்கியத்துவத்தைக் கூறுக.
36. சங்கப் பாடல்களின் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
37. மாணக்கர் அக்காலத்தில் சுவடிகளை எவ்வாறு அமைத்தனர்?
38. மணந்தகம் என்றால் என்ன?

### பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.

39. நெய்தல் திணையை உதாரணத்துடன் விவரி.

(அல்லது)

தலைமகன் பாங்கற்கு உரைத்த கூற்றை விவரி.

40. தொழில் உவமையணி (அல்லது)
மடக்கணியை தகுந்த குறட்பாவுடன் பொருந்திக்காட்டுக.

41. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' பழமொழியை விளக்கி வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

(அல்லது)

பின்வரும் உரைபத்தியை படித்து அதன் கருத்து மாறாமல் மூன்றில் ஒருபங்காகச் சுருக்கி எழுதுக.

42. தமிழாக்கம் தருக:
1. Covet all lose all.
2. Think before you act.
3. Honesty is the best policy.
4. A penny saved is a penny gained.

43. பின்வரும் தலைப்புகளில் ஒன்றின் கவிதை புனைக.
அம்மா (அல்லது) வழிகாட்டி

## பகுதி-IV

$3\times 6 = 18$

பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

ஆ) நாட்டியக் கலைஞருக்குத் தமிழர் உரிய சிறப்பு அளித்தனர் என்பதைச் சிலப்பதிகாரப் பாடற்பகுதி கொண்டு நிறுவுக.

45. அ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ) கோடை மழை கதையை நாடக வடிவில் எழுதுக.

## பகுதி-V

அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

47. அ) 'விண்வேறு' - என்று துவங்கும் சுரதாவின் பாடல். $1\times 4 = 4$
ஆ) 'அஃகாமை' என்று துவங்கும் திருக்குறளை எழுதுக. $1\times 2 = 2$